

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.10.2024) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய இராணுவத் தளபதி (General Officer Commanding, Dakshin Bharat Area) லெப்டினென்ட் ஜென்ரல் கே.எஸ்.பிரார் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அரசு மற்றும் இராணுவ உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பேராசிரியர் மணிகோ.பன்னீர்செல்வம் எழுதிய

# ‘நீலச்சட்டைக் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழா!

## ஆ.இராசா எம்.பி. வெளியிடுகிறார்!

சென்னை, அக்.2-

அய்யுறு வெளியீடு சார்பில் பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கை) எழுதிய ‘நீலச்சட்டைக் கலைஞர்’ எனும் நூல் வெளியீட்டு விழா 4.10.2024-வெள்ளிக்கிழமையன்று மாலை 5 மணியளவில் கோட்டூர்புரம், தமிழ் இணையக் கல்விக் கழக அரங்கத்தில் (அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில்) நடைபெறுகிறது.

இந்நூலை கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

பேரவை வலைக்காட்சி அரசியல் பிரிவு ஆசிரியர் இந்திரகுமார் தேரடி, கழக செய்தித் தொடர்பாளர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி, திராவிட இயக்க ஆய்வாளர் தமிழ் காமராசன், அரண் செய் வலைக்காட்சி இணையாசிரியர் மகிழ்நன் ஆகியோர் முதல் நூலைப் பெற்று உரையாற்றுகின்றனர்.

நூலாசிரியர் பேரா. மணிகோ. பன்னீர் செல்வம் ஏற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை இரா. மோகன வசந்தன் ஒருங்கிணைக்கிறார்.

### இனப் பகைவர்களும் - அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும்

# திசை திருப்பல்களுக்கு நேரம் கொடுக்கக் கூடாது!

### கழகத் தகவல் தொழில் நுட்ப அணியின் ‘திராவிட மாதம்’ கொண்டாட்டத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.2 -**

**கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செப்டம்பர் மாதத்தைத் திராவிட மாதமாகக் கொண்டாடி வருகிறது. திராவிட மாதத்தின் நிறைவுநாளான நேற்று முன்தினம் (30-09-2024) கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் யூடியூப் பக்கத்தில் சிறப்புரையாற்றினார்.**

**அப்போது முதல்வர் அவர்கள் “இனப் பகைவர்களும் - அவர்களுக்குத் துணை போகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல் களுக்கு நேரம் கொடுக்கக் கூடாது!” என்று குறிப்பிட்டார்.**

**முதல்வர் அவர்கள் உரை வருமாறு :-**





ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை திராவிட மாதமாக நாம் கொண்டாடி வருகிறோம். நம்முடைய வரலாறு, சாதனைகள், பல்வேறு அரசியல் விவகாரங்களில் திராவிடப் பார்வை என்று, கழக முன்னோடிகள், பேச்சாளர்கள், தோழமை இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் எனப் பலரையும் “திராவிட மாதம்” நிகழ்ச்சியில் பேச வைத்து, பயனுள்ள - கருத்துள்ள முன்னெடுப்பை நம்முடைய ஐ.டி. விங் செய்கிறது.

அதிலும் இது கழகத்தின் பவள விழா நிறைவு ஆண்டு. நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து - கடந்த காலத்தை எடைபோட்டு, நாம் அடுத்து நடைபோட வேண்டிய பாதையைத் தீர்மானிக்கக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பு.

**‘கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்!**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உரிமைகள் மறுக்கப்பட்டு - வாய்ப்புகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தமிழினம் மேலெழுந்து வந்த வரலாறுதான் நம்முடைய தி.மு.க. வரலாறு! இந்த இனம் இழிவில் இருந்து மீள வேண்டும் என்றுதான், சுயமரியாதையையும் - பகுத்தறிவுச் சிந்தனையையும் ஊட்டினார் தந்தை பெரியார். அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்த்தினார் பேறறிஞர் அண்ணா.

“கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்” என்று முழங்கிச் சட்டங்களும் திட்டங்களும் வகுத்துச் சமூகத்தின் மேடு பள்ளங்களைச் சமன்படுத்த உழைத்தார் நம்முடைய தலைவர் கலைஞர். தலைவர் கலைஞரின் உழைப்புதான் கழகத்தைப் பாதுகாத்தது. அவர் விட்டுச் சென்றுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு - கடமை நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப் பட்டிருக்கிறது! அந்தக் கடமையை, ‘நமக்கு நாமே’ நினைவூட்டிக் கொள்வதற்கான வாய்ப்புதான் இதுபோன்ற நிகழ்ச்சிகள்!

குறிப்பாக, இந்தாண்டு “உலகெங்கும் திராவிடம்” என்று, திராவிட இயக்கக் கொள்கைகளால் - சட்டத்திட்டங்களால் உலகத்தின் பல நாடுகளிலும் தமிழர்கள் சிறப்பான நிலையில் இருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் நிறைய வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதற்காக ஐ.டி. விங்கையும் - அயலக அணியையும் பாராட்டுகிறேன்!

இன்றைக்கு நம்முடைய இளைஞர்கள் உலகெங்கும் பல்வேறு நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளில் இருக்கிறார்கள். இதற்குப் பின்னால், நம்முடைய சமூகநீதிக் கொள்கை, தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் பொது நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது, முதல் தலைமுறைப் பட்டதாரிகளின் தொழிற்கல்விக்கான கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் இருக்கிறது.

**தலைமுறைகளின் முன்னேற்றமே, நாம் காண விரும்பும் வளர்ச்சி!**

நாம் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டமும் ஒரு படிக்கட்டு. ஒவ்வொரு படிக்கட்டிலும் ஒவ்வொருவர் ஏறும்போதும், ஒரு தலைமுறையே முன்னேறுகிறது! இந்த முன்னேற்றம்தான் நாம் காண விரும்பும் வளர்ச்சி!

இவ்வாறு வளர்ச்சியடைந்த பலரின் வீடியோக்களையும் பதிவு செய்திருக்கிறார்கள். வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, அவர்களின் அனுபவத்தை மற்றவர்களுக்கு வழிகாட்டும், ’கைடாக’ மாற்றியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருமே சாமானியர்கள். என்னைப் போன்று - உங்களைப் போன்று எளிய பின்னணியில் இருந்து வந்தவர்கள். கற்ற கல்வியால் - பெற்ற வாய்ப்புகளால் - உழைத்த உழைப்பால் இன்றைக்கு உயரங்களில் இருக்கிறார்கள். இந்த உயரத்துக்கான பாதைதான், சமூகநீதி!

**பயனுள்ள கருத்தாக்கங்களை உருவாக்கிடுவீர்!**

திராவிட இயக்கத்தின் சமூகநீதிப் போராட்ட வரலாற்றை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைத் திட்டங்களைத் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தில் மட்டும் சொல்லி முடித்துவிட முடியாது. எனவே, இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்க வேண்டும். ஆக்கப்பூர்வமான கருத்துகள் விவாதிக்கப்பட வேண்டும். பயனுள்ள கருத்தாக்கங்களை நீங்கள் உருவாக்க வேண்டும்.

இனப் பகைவர்களும் - அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல்களுக்கு நீங்கள் நேரம் கொடுக்கக் கூடாது. சமூக ஊடகங்களில் என்ன ’டிஸ்கஸ்’ செய்கிறீர்கள் என்று நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கு பேசப்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

**மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!**

பொய்களையும் - அவதூறுகளையும் - பாதி உண்மைகளை மட்டும் சொல்லிச் சிலர் குழப்புவார்கள். அதற்கு நீங்கள் யாரும் ஏமாந்துவிடக் கூடாது. எந்தச் செய்தி வந்தாலும் ‘எமோஷனலாக’ மட்டும் அணுகாதீர்கள்; அந்தச் செய்தி பற்றிய உண்மைத்தன்மையைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அந்தப் பொய்யைப் பரப்புகிறவர்களுக்கு இல்லாத இரண்டு, நம்மிடம் இருக்கிறது. அதுதான் தந்தை பெரியார் சொன்ன மானமும் அறிவும், மனிதருக்கு அழகு! எனவே, கவனமுடன் கடமையை ஆற்றுங்கள்! என்றும் வெற்றி நமதே!

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

### அமலாக்கத்துறையின் அடாவடிகளைக் கண்டிக்கத் தயங்கும்

# ராமதாஸ் - அரசியல் அறியாமல் அரைவேக்காடாய் அறிக்கை விடுவதா?

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

சென்னை, அக்.2-

“அரசியல் அறியாமல் அரைவேக்காடாய் அறிக்கை விடும் டாக்டர் ராமதாஸ் அவர்கள் அமலாக்கத்துறையின் அடாவடிகளைக் கண்டிக்கத் தயங்குவது ஏன்?” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

‘செந்தில் பாலாஜி தியாகி என்றால் ஏமாந்தவர்கள் துரோகிகளா? நீதிபதியாக இருக்க வேண்டிய முதலமைச்சர் செந்தில் பாலாஜிக்கு வழக்கறிஞராகக் கூடாது’ என அறிக்கை விட்டிருக்கிறார் டாக்டர் ராமதாஸ் அவர்கள்.

தைலாபுரம் அரசியல் பயிலரங்கத்தில் பாட்டாளிகளுக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியர் ராமதாஸ் அவர்கள், அரசியல் அறியாமல் அரைவேக்காடாய் அறிக்கை விட்டிருக்கிறார். செந்தில் பாலாஜி மீது உள்ள வழக்கு விவரத்தை அதற்குப் பின்னால் இருக்கும் அரசியலையும் முதலில் அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

செந்தில் பாலாஜி மீது 2015, 2017 மற்றும் 2018ல் மூன்று வழக்குகள் பதியப்பட்டன. 2015ல் பதிவான வழக்கு பற்றி அப்போந்த விவரங்களின் அடிப்படையில்தான் 2016 சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்தில் அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செந்தில் பாலாஜி குறித்துப் பேசினார். ஆனால், செந்தில் பாலாஜி தி.மு.க.வில் இணைய விருப்பம் தெரிவித்த போது, தான் குற்றமற்றவன். தன் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியால்தான் இந்த வழக்குகள் புனையப்பட்டது எனச் சொன்னார்.

டி.டி.வி. தினகரன் ஆதரவு 18 எம்.எல்.ஏகள் குழு, ஆட்சியிலிருந்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை மாற்ற வேண்டும் என ஆளுநரிடம் மனு அளித்ததால்தான், செந்தில் பாலாஜி உள்ளிட்ட 18 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதோடு அவர் மீது வழக்குகளும் புனையப்பட்டன. இந்த உண்மைகள் ராமதாஸ் அவர்களுக்குத் தெரியும். எடப்பாடி பழனிசாமி அரசைக் காப்பாற்றிக் கொள்ள செந்தில் பாலாஜி மீது வழக்குப் போட்டார். ராமதாஸ் தன் இருப்பை காட்டிக் கொள்ள அறிக்கை விட்டிருக்கிறார்.

**செந்தில் பாலாஜி மீது குற்றம் சுமத்தப்படவில்லை!**

தேவசகாயம் என்பவரின் புகாரின் மீது 29/10/2015 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதில் செந்தில் பாலாஜியின் மீது எந்த குற்றமும் சுமத்தப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையில் அவர் குற்றவாளியாகவும் சேர்க்கப்படவில்லை. கோபி அளித்த புகாரின் பேரில் உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 20.06.2017ல் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையில் 12 குற்றவாளிகள் சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் செந்தில் பாலாஜி அவர்கள் குற்றவாளியாகச் சேர்க்கப்படவில்லை.

மீண்டும் . அருண் குமார் என்பவர் 2019ல் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் பேரில் மேல் புலன் விசாரணை செய்யப்பட்டு, செந்தில் பாலாஜி அவர்களையும் குற்றவாளியாகச் சேர்த்து 08/03/2021 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. செந்தில் பாலாஜி அவர்கள் 06.09.2017 அன்று முதலமைச்சர். எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு எதிராக ஆளுநரிடம் புகார் அளித்த காரணத்தினாலேயே, இந்த வழக்குகள் அவர் மீது பொய்யாகச் சுமத்தப்பட்டன என்பது தெளிவாகிறது.



உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, .செந்தில் பாலாஜி அவர்கள் மீது வழக்கு தொடர இசைவானைக் கேட்டு வந்த கோப்பில், எந்த தாமதமும் இல்லாமல் முதல்வர் அவர்கள், ஆட்சி வேறு, கட்சி வேறு என்ற நிலையில் கோப்புகளில் உள்ள அம்சங்களை மட்டுமே கவனித்து தன் சொந்த விருப்பு வெறுப்புகளை கடந்து கடமையாற்றியது எல்லாம் ராமதாஸ் அவர்களுக்குப் புரியவில்லையா? இல்லை புரியாமல் நடிக்கிறாரா?

**தைலாபுரத்தாருக்கு புரியாது!**

செந்தில் பாலாஜி அவர்கள் தியாகம் செய்துவிட்டு சிறை செல்லவில்லைதான். ஆனால், பொய் வழக்குகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பணப்பரிமாற்ற வழக்கில், ஒன்றிய அரசின் எதேச்சாதிகார போக்கால் அவரை கைது செய்து, அழுத்தம் தந்து துன்புறுத்தி வாக்குமூலம் பெற்று, தி.மு.க.வின் மீது மேலும் பொய் வழக்குகள் போடலாம் என்ற கனவை அவர் பொய்யாக்கினார். அதற்காக 471 நாட்கள் சிறையில் இருந்தார். முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு மீதான விசாரணையின் போது, “அமலாக்கத்துறையினர் செந்தில் பாலாஜியிடம் ‘ஏன் நீங்கள் பா.ஜ.க.வில் சேரக்கூடாது?’ என கேட்டனர்” என்ற அதிர்ச்சி தகவலைச் செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர் சொன்னார். பாஜகவில் அவரை சேர்த்து திமுகவுக்கு எதிராக களமாட நினைத்தார்கள். அதற்கு அடிபணியாமல், அஞ்சாமல் நின்ற உறுதிதான் தியாகம். அது நல்லெண்ணம் கொண்டோருக்கு மட்டுமே புரியும். பா.ஜ.க. நிழலில் இருக்கும் தைலாபுரத்தில் இருப்பவர்களுக்கு எத்தனை விளக்கவுரை, பொழிப்புரை அளித்தாலும் புரியாது.

1989 ஜூலை 16ம் தேதி நினைவிருக்கிறதா? அன்றுதான் டாக்டர் ராமதாஸ் அவர்கள் 5 சத்தியங்களைச் செய்தார். அதில் ஒன்றுதான், ‘என் வாரிசுகள் கட்சியில் எந்த பொறுப்புக்கும் வரமாட்டார்கள்’ என்றார். இப்போது அன்புமணி கட்சியின் கடைக்கோடி உறுப்பினரா? ’சத்தியம் தவறாத உத்தமர் போல’ நடிக்கும் ராமதாஸ் எதற்கெடுத்தாலும் அறிக்கைவிடுவார். ஏன் அமலாக்கத் துறையின் அடாவடிகளைக் கண்டித்து அறிக்கை விடத் தயங்குகிறார்? அமலாக்கத்துறையை பாஜகவுக்கு ஆள் சேர்க்கும் துறையாக மோடி அரசு ஏவிக் கொண்டிருக்கும் சூழலில் ஆட்சியில் இருந்து கொண்டே அதனைத் தீரத்தோடு எதிர்த்து களமாடிக் கொண்டிருக்கிறது திமுக அரசு. ஆனால், எதிர்க் கட்சியாக இருக்கும் பாமக அமலாக்கத்துறையின் அத்துமீறல்களை ஏன் எதிர்க்கவில்லை? அதற்குப் பின்னால் இருக்கும் நுண்ண ரசியல் என்ன?

**பா.ஜ.க. கூட்டணியே கதியென்று கிடக்கும் ராமதாஸ்!**

2014 நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து 2024 நாடாளுமன்றத் தேர்தல் வரையில் பத்தாண்டுகளாக பாஜக கூட்டணியே கதியென்று பாமக ஏன் பம்மிக் கிடக்கிறது? மத்திய அமைச்சராக இருந்த போது, அன்புமணி ராமதாஸ் மருத்துவக் கல்லூரிகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கியதாக சிபிஐ தொடர்ந்த வழக்கு டெல்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மருத்துவக் கல்லூரி அனுமதி முறைகேடு தொடர்பாகக் கடந்த 2015ம் ஆண்டு அன்புமணி மீது சிபிஐ குற்றச்சாட்டுப் பதிவு செய்தது. இந்த வழக்கில் இருந்து தப்பித்து கொள்ளக் கமலாலயத்தில் தஞ்சம் அடைந்தவர்கள் எல்லாம் செந்தில் பாலாஜி வழக்கை எதிர்கொள்ளும் திமுகவைத் தூற்ற கொஞ்சமும் அருகதை இல்லாதவர்கள். மருத்துவ கல்லூரிகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கிய விவகாரத்தில் சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கு ஏன் வரவில்லை? ஏன் அமலாக்கத் துறை அடக்கி வாசிக்கிறது? தைலாபுரம் ஏன் அமலாக்கத் துறையை எதிர்க்கவில்லை? என்பதில் புதைந்திருக்கிறது அரசியல்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கிய அன்புமணி ராமதாஸுக்கு ஏன் தொடர்ச்சியாக ராஜ்ய சபா சீட் தரப்படுகிறது? பா.ம.க.வில் தகுதியான நபர்களே இல்லையா?

2016 சட்டமன்றத் தேர்தலில் செந்தில் பாலாஜி செய்த ஊழல்களை மு.க. ஸ்டாலின் அவர்கள் முன் வைத்தாரே எனச் சொல்லும் ராமதாஸ் அவர்கள், ஜெயலலிதாவுக்கு நினைவிடம் கட்டிய போது என்ன சொன்னார் என்பது மறந்துவிட்டதா? ‘சொத்துக் குவிப்பு வழக்கு குற்றவாளி ஜெயலலிதாவுக்கு நினைவிடமா? அது ஊழலின் சின்னமாகவே பார்க்கப்படும்’ எனக் காட்டமாக அறிக்கை விட்டு விட்டு, அந்த நினைவிடம் கட்டிய எடப்பாடி பழனிசாமியிடமே தேர்தல் கூட்டணி வைத்தாரே!

“ஜெயலலிதாவுக்கு மணி மண்டபம் கட்டும் எடப்பாடி, பன்னீர்செல்வம் தலைமையிலான பினாமி அரசின் ஊழல்களையும் மறைக்க முடியாது; அதனால் ஏற்பட்ட பாவங்களைக் கழுவ முடியாது” என முன்பு ராமதாஸ் சொன்னார். அந்த பினாமிகளோடுதான் 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும் 2021 சட்டமன்றத் தேர்தலிலும் ராமதாஸ் கூட்டணி வைத்தார். பா.ம.கவின் பாவங்களை கழுவிவிட்டு, வந்து ராமதாஸ் அவர்கள் தி.மு.க.வை விமர்சிக்கட்டும்!

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று (2.10.2024 – புதன்கிழமை) விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல் **4.10.2024 - வெள்ளிக்கிழமை** அன்று வெளிவரும்.

**- நிர்வாகி**





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 30.09.2024 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோடம்பாக்கம் சிவலிங்கபுரம் ஆர்.தேவி,ஆர்.முத்துலட்சுமி ஆகியோரின் சின்னப்பிள்ளை மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவியை வழங்கினார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, தயாநிதிமாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பலர் உள்ளனர்.